# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள்
## (திருத்தம்)

***1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

---

*கடற்றொழில் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரால் 2013, ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2013, ஒற்றோபர் மாதம் 07 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ ***273 ஆம் சட்டமூலம்*** ]


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

***விலை : ரூபா 26.00*** ***தபாற் செலவு : 15.00***

2-PL 007685 -650 (2013/10)

ச.வ.ஓ. 1/2011

**1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்.

**1.** இச்சட்டம், 2013 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, கடற்றொழில் நீர்வாழ் உயிரின வளங்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்துக்கான விரிவுப் பெயரைத் திருத்துதல்.

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்துக்கான விரிவுப்பெயர், "பேணிக்காப்பதற்கும், அபிவிருத்திசெய்வதற்கும்; (212 ஆம் அத்தியாயமான) கடற்றொழில் கட்டளைச் சட்டத்தையும்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "பேணிக்காப்பதற்கும், அபிவிருத்திசெய்வதற்கும் ; குறித்தசில சர்வதேச மற்றும் பிராந்தியக் கடற்றொழில் உடன்படிக்கைகளின்கீழ் இலங்கையின் கடப்பாடுகளுக்குப் பயன்கொடுப்பதற்கும் ; (212 ஆம் அத்தியாயமான) கடற்றொழில் கட்டளைச் சட்டத்தையும் " என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அவ்வுட்பிரிவின் (ஆ), (இ), (ஈ) மற்றும் (உ) என்னும் பந்திகளை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன் மூலமும் :-

"(ஆ) பணிப்பாளர் தலைமையதிபதி ;

(இ) கடற்றொழில் என்னும் விடயம் ஒவ்வொரு மாகாணத்தினதும் அமைச்சர்கள் சபையின் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் ;

(ஈ) 1999 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் தேசிய நிறுவகச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் தேசிய நிறுவகத்தின் பேரவைத் தவிசாளர் ;

(உ) கடற்றொழில் அமைச்சினது திட்டமிடல், கண்காணிப்புப் பணிப்பாளர் ; அவரே பேரவையின் செயலாளராகவிருத்தல் வேண்டும் ;";

(2) அவ்வுட்பிரிவின் (ஐ) மற்றும் (ஒ) என்னும் பந்திகளை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன் மூலமும் :-

"(ஐ) சூழல் என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்படுகின்றதோ அந்த அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது நியமித்தர் ;

(ஒ) 1981 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க, கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட, கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத் திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமைதியதிபதி"; அத்துடன்

(3) அவ்வுட்பிரிவின் (ஓ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்திகளை உட்புகுத்துவதன்மூலமும் :-

“(ஓஅ) 1998 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, இலங்கைத் தேசிய நீரியல் பொருட்களைப் பண்படுத்தல் அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட, தேசிய நீரியல் பொருட்களைப் பண்படுத்தல் அபிவிருத்தி அதிகாரசபையின் தவிசாளர் ;

(ஓஆ) கடற்றொழில் அமைச்சினது பணிப்பாளர் தலைமையதிபதி (தொழினுட்பம்) ;

(ஓஇ) 2009 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, கரையோரப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட, கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமை யதிபதி ;

(ஓஈ) காடு பேணற் கட்டளைச் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட, காடு பேணுநர் தலைமை யதிபதி ;

(ஓஉ) 2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, கமநல அபிவிருத்திச் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட, கமநல அபிவிருத்தி ஆணையாளர் தலைமையதிபதி ;

(ஓஊ) நீர்ப்பாசனம் என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்பட்டுள் ளதோ அந்த அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது நியமித்தர் ;

(ஓஎ) வனசீவராசிகள் பாதுகாப்பு என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப் பட்டுள்ளதோ அந்த அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது நியமத்தர் ;

(ஒஏ) ஆற்று வடிநிலம் என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது நியமத்தர் ;

(ஒஐ) காணி என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது நியமத்தர் ;

(ஒஒ) சுற்றுலாப் பயணத்துறை என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது நியமத்தர் ;

(ஒஓ) 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட வரையறுக்கப்பட்ட அகில இலங்கை மாடெல் சொந்தக்காரர்கள் கடற்றொழில் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் ;

(ஒஔ) தேசிய கடற்றொழில் சம்மேளனத்தின் தவிசாளர் ;

(ஒக) கடற்றொழில் ஒழுங்கமைப்புக்களின் தேசிய கடற்றொழிற் சம்மேளனத்தினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட, மீன்பிடித்தலில் ஈடுபட்டுள்ள ஆட்கள் இருவர் ;

(ஒங) பலநாள் மீன்பிடித்தலுக்கான வள்ளச் சொந்தக்காரர்கள் கழகத்தினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட, மீன்பிடித்தலில் ஈடுபட்டுள்ள ஆட்கள் இருவர் ;".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் பாகம் II இல் காணப்படும் தலைப்பைத் திருத்துதல்.*

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் II ஆம் பாகத்தில் காணப்படும் தலைப்பு, "மீன்பிடித் தொழிற்பாடுகளுக்கு உரிமமளித்தல்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இலங்கை நீர்ப்பரப்புகளில் மீன்பிடித் தொழிற்பாடுகளுக்கு உரிமமளித்தல்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தில் புதிய பாகம் II அ வை உட்புகுத்துதல்.*

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் பாகம் II ஐ உடனடுத்துப் பின்வரும் புதிய பாகம் இத்தால் உட்புகுத்தப்படுகின்றதுடன், இது அச்சட்டவாக்கத்தின் பாகம் IIஅ என பயனுறுதலும் வேண்டும் :-

"பாகம் IIஅ

**ஆழ்கடலிலான மீன்பிடித் தொழிற்பாடுகளுக்கு உரிமமளித்தல்**

*ஆழ்கடலிலான மீன்பிடித் தொழிற்பாடுகளுக்கு உரிமமளித்தல்.*

14அ. ஆளெவரும், பணிப்பாளர் தலைமையதிபதியினால் அளிக்கப்பட்ட உரிமமொன்றின் அதிகாரத்தின் கீழன்றியும், அதன் நியதிநிபந்தனைகளுக்கு இணங்கவன்றி வேறுவகையாகவும், ஆழ்கடலிலான எவையேனும் விதித்துரைக்கப்பட்ட மீன்பிடித் தொழிற்பாடுகளில் ஈடுபடுதலாகாது.

*உரிமமொன்றுக்கான விண்ணப்பம்.*

14ஆ. (1) பிரிவு 14அ என்பதன் கீழான உரிமமொன்றுக்கான ஒவ்வொரு விண்ணப்பமும் விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் பணிப்பாளர் தலைமையதிபதிக்குச் செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட வெளிப்படுத்துகையுடனும் விதித்துரைக்கப்பட்ட கட்டணத்துடனும் சேர்த்தனுப்பப்படுதலும் வேண்டும்.

(2) (அ) (1 ஆம் உட்பிரிவின்கீழான விண்ணப்பமொன்று, ஆழ்கடலில் மீன்பிடிப்பதற்கு வேறோர் அரசினால் விண்ணப்பகாரருக்கு உரிமமொன்று

அல்லது அனுமதிப்பத்திரமொன்று வழங்கப் பட்டுள்ளதா அல்லதாவென்பதைக் கூறுகின்றதும், அவரினால் கையொப்பமிடப்பட்டதுமான சத்தியத்தின் மீதான வெளிப்படுத்துகையொன்றுடன் சேர்த்தனுப்பப்படுதல் வேண் டும்.

(ஆ) ஆட்கடலில் மீன்பிடிப்பதற்கு வேறோர் அரசினால் விண் ணப்பகாரருக்கு உரிமமொன்று அல்லது அனுமதிப்பத்திரமொன்று வழங்கப் பட்டுள்ளதென அவர் வெளிப்படுத்தினால், அவர் பின்வருவனவற்றையும் வெளிப்படுத்துதல் வேண் டும் :-

(i) அத்தகைய உரிமத்தை அல்லது அனுமதிப்பத்திரத்தை வழங்கியுள்ள அரசின் பெயரும், அது வழங்கப்பட்ட தேதியும் ;

(ii) அத்தகைய உரிமம் அல்லது அனுமதிப் பத்திரம் அடுத்துப் பின்னர் இடைநிறுத் தப்பட்டிருப்பின், அது இடைநிறுத்தப் பட்ட தேதியும், அது எக்காலப்பகுதிக்கு இடைநிறுத்தப்பட்டதோ அக்காலப்பகுதியும் ; அத்துடன்

(iii) அத்தகைய உரிமம் அல்லது அனுமதிப் பத்திரம் அடுத்துப் பின்னர் இல்லாதாக் கப்பட்டிருப்பின், அது இல்லாதாக்கப் பட்ட தேதி.

(3) ஓராம் உட்பிரிவின்கீழான விண்ணப்ப மொன்று கிடைக்கப் பெற்றதன்மீது பணிப்பாளர் தலைமையதிபதி, (4) ஆம் உட்பிரிவின் ஏற்பாடு

களுக்கமைய, ஒன்றில் உரிமமொன்றை அளிக்கலாம் அல்லது அவரினால் பதியப்படவேண்டிய காரணங்களுக்காக உரிமமொன்றை அளிக்க மறுக்கலாம்.

(4) பணிப்பாளர் தலைமையதிபதி, (3) ஆம் உட்பிரிவின் கீழ் பின்வரும் சந்தர்ப்பங்களில் உரிமமொன்றை அளிக்க மறுத்தல் வேண்டும் :-

(அ) எந்த உள்ளூர் மீன்பிடி வள்ளம் தொடர்பில் விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளதோ அந்த உள்ளூர் மீன்பிடி வள்ளம், இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்பட்ட அளவுக் குறிப்பீடுகளுக்கிணங்க நிர்மாணிக்கப்படாதிருப்பின் ;

(ஆ) அத்தகைய வள்ளம் இச்சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்படாதிருப்பின் ;

(இ) அத்தகைய வள்ளம் ஒருசீரான மற்றும் சர்வதேச ரீதியில் அடையாளம் காணப்படத்தக்க கலம் குறியிடுதல் முறைமைகளுக்கிணங்கக் குறியிடப்படாதிருப்பின்;

(ஈ) அத்தகைய வள்ளத்தில் ஏற்றிச் செல்லப்படும் மீன்பிடி கருவிகள், கருவிகளின் சொந்தக்காரரை இனங்காண்பதனை இயலச் செய்வதற்கு ஒருசீரான மற்றும் சர்வதேசரீதியில் அடையாளங் காணப்படத்தக்க கருவிக் குறியிடுதல் முறைமைகளுக்கிணங்கக் குறியிடப்படாதிருப்பின் ;

(உ) அத்தகைய வள்ளத்துடன் பயனுள்ள முறையில் தொடர்பு கொள்வதற்கும் அத்தகைய வள்ளத்தின் செயற்பாடு

களின்மீது கட்டுப்பாட்டைப் பிரயோகிப்பதற்கும் பணிப்பாளர் தலைமையதிபதியையும் அவரது பணியாட்டொகுதியினரையும் இயலச் செய்கின்ற கலம் கண்காணிப்பு முறைமையொன்றும் தொடர்புகொள்ளும் முறைமையொன்றும் அத்தகைய வள்ளத்தில் பொருத்தபடாதிருப்பின் ;

(ஊ) இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகளினால் விதித்துரைக்கப்பட்ட பாதுகாப்புச் சாதனங்கள் அத்தகைய வள்ளத்தில் பொருத்தப்படாதிருப்பின் ;

(எ) விண்ணப்பகாரர் வேறோர் அரசினால் வழங்கப்பட்ட ஓர் உரிமத்தினால் அல்லது அனுமதிப்பத்திரத்தினால் ஆழ் கடலில் மீன்பிடித்தலுக்காக அத்தகைய வள்ளத்தைப் பயன்படுத்துவதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருப்பின் -

(i) அத்தகைய உரிமம் அல்லது அனுமதிப்பத்திரம் ஒரு காலப் பகுதிக்கு இடைநிறுத்தப்பட்டிருப்பின் ; அத்துடன்

(ii) இடைநிறுத்தற் காலப்பகுதி தொடர்ந்தும் வலுவிலிருப்பின் ; அல்லது

(iii) அத்தகைய உரிமம் அல்லது அனுமதிப்பத்திரம் இல்லாதாக்கப்பட்டிருப்பின்; அத்து டன்

(iv) அத்தகைய இல்லாதாக்குகையிலிருந்து மூன்றாண்டு காலப்பகுதி கழியாதிருப்பின்.

உரிமத்தின் படிவமும் கால எல்லையும்.

*14*இ. இப்பாகத்தின்கீழ் அளிக்கப்பட்ட ஒவ்வோர் உரிமமும் :-

(அ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலிருத்தல் வேண்டும் ;

(ஆ) முன்னரே இடைநிறுத்தப்பட்டால் அல்லது இல்லாதாக்கப்பட்டால் ஒழிய, அத்தகைய உரிமம் அளிக்கப்பட்ட தேதியிலிருந்து ஒரு பஞ்சாங்க ஆண்டு காலப்பகுதிக்கு வலுவிலிருத்தல் வேண்டும் ;

(இ) உரிமமானது எந்த உள்ளூர் மீன்பிடி வள்ளத்துக்கு ஏற்புடையதாகவுள்ளதோ அந்த உள்ளூர் மீன்பிடி வள்ளத்தின் தொழிற்பாட்டு இடப்பரப்பு, ஒவ்வொரு மீன்பிடிப் பயணம் தொடர்பாகவும் பிடித்துவைத்திருக்கப்பட்ட மீன், கழிக்கப்பட்ட மீன் மற்றும் அத்தகைய வள்ளத்தின் தரையீடுகள் என்பன தொடர்பாக உரிமம் வைத்திருப்பவரினால் தகவல் வழங்கப்படுதல் தொடர்பான நிபந்தனைகளுட்பட, அத்தகைய உரிமத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட மீன்பிடித் தொழிற்பாடுகள் தொடர்பாக விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதி நிபந்தனைகளுக்கு அமைந்ததாதல் வேண்டும்.

*உரிமங்கள் பற்றிய இடாப்பு.*

*14ஈ.* (1) பணிப்பாளர் தலைமையதிபதி, சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் அளிக்கப்பட்ட எல்லா உரிமங்களும் பற்றிய இடாப்பொன்றைப் பேணுவித்தல் வேண்டும். அத்தகைய இடாப்பு இலத்திரனியல் வடிவத்திலும் பேணப்படலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் பேணப்பட்ட ஏதேனும் இடாப்பின் உண்மையான பிரதியென அல்லது பிரித்தெடுத்த பகுதியெனப் பணிப்பாளர் தலைமையதிபதியின் கைப்பட அத்தாட்சிப்படுத்தப்பட்டதெனக் கொள்ளப்படுகின்ற ஒரு பிரதி அல்லது பிரித்தெடுத்த பகுதி, பணிப்பாளர் தலைமையதிபதியின் கையொப்பம் அல்லது நியமனம் பற்றிய எண்பிப்பின்றிச் சான்றில் ஏல்தகவுடையதாதல் வேண்டுமென்பதுடன், எல்லா நோக்கங்களுக்காகவும், எல்லாக் குடியியல் அல்லது குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளிலும் முதற்றோற்றச் சான்றாதலும் வேண்டும்.

*உரிமம் வள்ளத்தில் கொண்டு செல்லப் படுதல் வேண்டும்.*

*14உ.* இப்பாகத்தின்கீழ் அளிக்கப்பட்ட உரிமமொன்றை வைத்திருப்பவர், வேறோர் அரசின் தேசிய நியாயாதிக்கத்தினுள்ளான நீர்ப்பரப்புகளில், உரிமம் எந்த உள்ளூர் மீன்பிடி வள்ளத்துக்கு ஏற்புடையதாகவுள்ளதோ அந்த உள்ளூர் மீன்பிடி வள்ளத்தைப் பயன்படுத்துவதற்கு அல்லது பயன்படுத்துவிப்பதற்கு அவ்வரசின் சட்டங்களுக்கிணங்க அதிகாரமளிக்கப்பட்டாலொழிய, அவ்வாறு செய்தலாகாது.

*வெளிநாட்டு நீர்ப்பரப்புகளில் மீன் பிடிப்பதன் மீதான தடை.*

*14ஊ.* இப்பாகத்தின்கீழ் அளிக்கப்பட்ட உரிமமொன்றை வைத்திருப்பவர் வேறோர் அரசின் தேசிய நியாயாதிக்கத்தினுள்ளான நீர்ப்பரப்புகளில், மீன்பிடித் தொழிற்பாடுகளுக்காக, உரிமம் எந்த உள்ளூர் மீன்பிடி வள்ளத்துக்கு ஏற்புடையதாகவுள்ளதோ அந்த உள்ளூர் மீன்பிடி வள்ளத்தை, அவ்வரசின் சட்டங்களுக்கிணங்க அவ்வாறு செய்வதற்கு அதிகாரமளிக்கப்பட்டாலொழிய, பயன்படுத்துதலோ அல்லது பயன்படுத்துவித்தலோ ஆகாது.

பேணிக் காத்தல் மற்றும் முகாமைத்துவ வழிமுறைகளுக்கு உரிமம் பெற்றவர் இணங்கியொழுகுதல்.

*14எ.* ஆழ்கடலில் மீன்பிடித் தொழிற்பாடுகளுக்காக ஓர் உள்ளூர் மீன்பிடி வள்ளத்தின் பயன்பாட்டை அதிகாரமளிக்கின்றதும், இப்பாகத்தின்கீழ் அளிக்கப்பட்டதுமான உரிமமொன்றை வைத்திருப்பவர்,-

(அ) 1982, திசெம்பர் 10 ஆந் தேதிய கடற் சட்டத்தின் மீதான ஐக்கிய நாடுகள் சபைச் சமவாயத்தின்கீழ்;

(ஆ) இந்து சமுத்திர டியூனா ஆணைக்குழுவினால் ;

(இ) 1995 ஆம் ஆண்டின் மீன் கையிருப்புகள் உட ன்படிக்கையின்கீழ் ; அத்துடன்

(ஈ) 2009 ஆம் ஆண்டின் சட்டவிரோதமான, அறிக்கையிடப்படாத மற்றும் ஒழுங்குபடுத்தப்படாத மீன்பிடித்தலைத் தடுப்பதற்கும், தடைசெய்வதற்கும், ஒழிப்பதற்குமான துறைமுக அரச வழிமுறைகள் மீதான ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் கமத்தொழில் ஒழுங்கமைப்பு (உகஒ) உடன்படிக்கையின்கீழும்,

ஏற்றுக்கொள்ளப்பட்டவையும், இலங்கையைப் பிணைப்பவையும், பேணிக்காத்தல் மற்றும் முகாமைத்துவ வழிமுறைகளைச் செயற்படுத்துகின்றவையும், 61(ந) என்னும் பிரிவின்கீழ் அமைச்சரினால் ஆக்கப்பட்டவையுமான ஒழுங்குவிதிகளுக்கு முரணாக அத்தகைய வள்ளத்தைப் பயன்படுத்துதலோ அத்தகைய வள்ளத்தைப் பயன்படுத்துவித்தலோ ஆகாது.

உரிமத்தைப் புதுப்பித்தல்.

*14ஏ.* (1) இப்பாகத்தின் கீழ் அளிக்கப்பட்ட உரிமமொன்றை வைத்திருப்பவர், அவ்வுரிமம் முடிவுறுவதற்கு முன்னர் முப்பது நாட்களுக்குக் குறையாமல் உரிமத்தைப் புதுப்பிப்பதற்காகப் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு விண்ணப்பிக்கலாம்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி -

(அ) உரிமம் ஏற்புடையதாகவுள்ள உள்ளூர் மீன்பிடி வள்ளம், பிரிவு 14ஆ (4) இல் குறிப்பீடு செய்யப்பட்ட நிபந்தனைகளுடன் தொடர்ந்தும் இணங்கியொழுகுகின்றதென்று ;

(ஆ) உரிமம் வைத்திருப்பவர் அத்தகைய உரிமத்தின் நியதிநிபந்தனைகளைக் கடைப்பிடித்துள்ளாரென்று ;

(இ) உரிமம் வைத்திருப்பவர் உரிமத்தைப் புதுப்பிப்பதற்கான விதித்துரைக்கப் பட்ட கட்டணத்தைச் செலுத்தியுள்ளா ரென்று ; அத்துடன்

(ஈ) உரிமத்தைப் புதுப்பித்தலானது, பிரிவு 14எ இல் குறிப்பீடு செய்யப் பட்டவையும், 61 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினால் செயற்படுத்தப்பட்டவையுமான பேணிக்காத்தல் மற்றும் முகாமைத் துவ வழிமுறைகளின் பயனுறு தன்மையைக் குறைக்கமாட்டா தென்று,

அவர் திருப்திபடின், உரிமத்தைப் புதுப்பித்தல் வேண்டும்.

உரிமமொன்றை இடை நிறுத்துதல்.

14ஐ. பணிப்பாளர் தலைமையதிபதி, விசாரிக் கப்படுவதற்கான சந்தர்ப்பமொன்றை உரிமம் வைத்திருப்பவருக்கு அளித்த பின்னர், அத்தகைய உரிமம் வைத்திருப்பவர் 14ஊ என்னும் பிரிவை அல்லது 14எ என்னும் பிரிவை மீறியமைக்காகப் புலனாய்வு செய்யப்படுகின்றாரென அவர்

திருப்திபடின், இப்பாகத்தின்கீழ் அளிக்கப்பட்ட உரிமமொன்றை இடைநிறுத்துதல் வேண்டும். அத்தகைய ஏதேனும் இடைநிறுத்துகை, புலனாய்வு முடிவடையும்வரை பயனுடையதாதல் வேண்டும்.

உரிமமொன்றை இடைநிறுத்துதல்.

14ஒ. பணிப்பாளர் தலைமையதிபதி, இப்பாகத்தின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட உரிமமொன்றை–

(அ) உரிமம் வைத்திருப்பவர் இச்சட்டத்தின் கீழான தவறொன்றுக்குக் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளாரென ;

(ஆ) உரிமம் வைத்திருப்பவர் இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டை அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியை அல்லது அத்தகைய உரிமத்தின் ஏதேனும் நியதியை அல்லது நிபந்தனையை மீறியுள்ளாரென;

(இ) உரிமம் வைத்திருப்பவர், உரிமம் எந்த உள்ளூர் மீன்பிடி வள்ளத்துக்கு ஏற்புடையதாகவுள்ளதோ அந்த உள்ளூர் மீன்பிடி வள்ளத்தை, வேறோர் அரசின் தேசிய நியாயாதிக்கத்தினுள்ளான நீர்ப்பரப்புகளில் அதிகாரமளிக்கப்படாத மீன்பிடித்தலுக்காக அல்லது வேறோர் அரசின் தேசிய நியாயாதிக்கத்தினுள்ளான அல்லது ஆழ்கடலில் அதிகாரமளிக்கப்படாத அல்லது சட்டவிரோதமான செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்தியுள்ளாரென ;

(ஈ) உரிமம் எந்த மீன்பிடி வள்ளத்துக்கு ஏற்புடையதாகவுள்ளதோ அந்த

மீன்பிடி வள்ளம், ஓர் உள்ளூர் மீன்பிடி வள்ளமாக இல்லாதொழிந்துள்ளதென ; அத்துடன்

(உ) மீன்பிடி வள்ளத்தின் பதிவானது இல்லாதாக்கப்பட்டுள்ளதென,

அவர் திருப்திப்படின், இல்லாதாக்குதல் வேண்டும்.

**பணிப்பாளர் தலைமையதிபதி, முடிபுகளை, காரணங்களுடன் சேர்த்து, அறிவித்தல்.**

14ஓ. பணிப்பாளர் தலைமையதிபதி உரிமமொன்றை அளிக்க அல்லது புதுப்பிக்க மறுக்குமிடத்து அல்லது உரிமமொன்றை இடைநிறுத்துமிடத்து அல்லது இல்லாதாக்குமிடத்து அவர் அத்தகைய முடிபையும் அதற்கான காரணங்களையும், விடயத்துக்கேற்ப, விண்ணப்பகாரருக்கு அல்லது உரிமம்பெற்றவருக்கு அறிவித்தல் வேண்டும்.

**மேன்முறையீடுகள்.**

14ஔ. (1) பிரிவு 14ஓ என்பதன்கீழ் அவருக்கு அறிவிக்கப்பட்ட முடிபொன்றினால் இன்னலுறும், விடயத்துக்கேற்ப, விண்ணப்பகாரர் அல்லது உரிமம் பெற்றவர், அம்முடிபு அவருக்கு அறிவிக்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களினுள் அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு அம்முடிபுக்கெதிராக எழுத்தில் மேன்முறையீடு செய்யலாம்.

(2) (அ) செயலாளர், (1) ஆம் உட்பிரிவின்கீழ் அவருக்குச் செய்யப்பட்ட ஒவ்வொரு மேன்முறையீட்டையும், அத்தகைய மேன்முறையீட்டின்மீதான அதன் விதப்புரைகளுக்காக மேன்முறையீட்டு மதியுரைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்துதல் வேண்டும்.

(ஆ) மேன்முறையீட்டு மதியுரைக் குழு, கடற்றொழில், நீர்வாழ், உயிரின வளங்களை முகாமை செய்வதிலும் பேணிக்காப்பதிலும் அறிவும் அனுபவமும் உடைய ஆட்களிடையேயிருந்து செயலாளரினால் நியமிக்கப்பட்ட மூன்று ஆட்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) மேன்முறையீட்டு மதியுரைக் குழு, பந்தி (அ) வின்கீழ் அதற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட ஒரு மேன்முறையீட்டின் மீது, இருதிறத்தவர்களையும் விசாரித்தபின்னர் அத்தகைய ஆற்றுப்படுத்துகையிலிருந்து பதினான்கு நாட்களினுள் அதன் விதப்புரைகளைச் செய்தல் வேண்டும்.

(3) செயலாளர், (1) ஆம் உட்பிரிவின்கீழ் அவருக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட மேன்முறையீடொன்றை, மேன்முறையீட்டு மதியுரைக் குழுவின் விதப்புரைகளைக் கவனத்துட்கொண்டு தீர்மானித்தல் வேண்டுமென்பதுடன், ஒன்றில் -

(அ) மேன்முறையீட்டை அனுமதித்து உரிமத்தை அளிக்கும்படி அல்லது புதுப்பிக்கும்படி அல்லது உரிமத்தின் இடைநிறுத்துகையை அல்லது இல்லாதாக்குகையை இல்லாதொழிக்கும்படி பணிப்பாளர் தலைமையதிபதியைப் பணிக்கலாம் ; அல்லது

(ஆ) குறிக்கப்பட்ட காரணங்களுக்காக மேன்முறையீட்டுக்கு அனுமதி மறுக்கலாம்.

(4) பணிப்பாளர் தலைமையதிபதி, செயலாளரினால் (3) ஆம் உட்பிரிவின்கீழ் அவருக்கு வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்புக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

(5) உரிமமொன்றுக்கான அல்லது உரிமமொன்றைப் புதுப்பிப்பதற்கான விண்ணப்பமொன்று மறுக்கப்படும்போது பணிப்பாளர் தலைமையதிபதி, அத்தகைய விண்ணப்பத்துடன் சேர்த்தனுப்பப்படும் கட்டணத்தை, விடயத்துக்கேற்ப, விண்ணப்பகாரருக்கு அல்லது உரிமம் பெற்றவருக்கு மீளளித்தல் வேண்டும்.

(6) இப்பிரிவின்கீழ் செயலாளரின் முடிபு இறுதியானதும் முற்றானதுமாதல் வேண்டும்.

உரிமங்களைக் கைமாற்றுதல்.

14க. (1) இப்பாகத்தின்கீழ் அளிக்கப்பட்ட உரிமமொன்று பணிப்பாளர் தலைமையதிபதியின் சம்மதத்துடன்தவிர கைமாற்றப்படுதலாகதென்பதுடன், அத்தகைய ஏதேனும் கைமாற்றம் அத்தகைய உரிமத்தின்மீது புறக்குறிப்பிடப்படுதலும் வேண்டும். உரிமமொன்றை கைமாற்றும் பட்சத்தில் மீன்பிடி வள்ளமொன்றின் பதிவானது கைமாற்றப்பெறுபவரின் பெயரில் பெறப்படுதல் வேண்டும்.

(2) பிரிவு 14ஒ என்பதன்கீழ் எந்த ஆளின் உரிமம் இல்லாதாக்கப்பட்டுள்ளதோ அந்த ஆள் அவரது பெயரில் உரிமமொன்று கைமாற்றப்படுவதற்கு உரித்துடையவராதலாகாது.

மீனவருக்கான கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள்.

14ங. பணிப்பாளர் தலைமையதிபதி, வளங்கள் கிடைக்கக்கூடியமைக்கு அமைய, இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் பற்றியும் இந்து சமுத்திர டியூனா ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட வழிகாட்டுநெறிகள் பற்றியும் கல்வி புகட்டுவதற்கும் மீன் கையிருப்புகளைப் பேணிக் காப்பதற்கும் தீழ்ப்பை மிகக்குறைவாக்குவதற்கும் அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட வழிமுறைகள் பற்றி மீனவருக்கிடையே விழிப்புணர்ச்சியை உருவாக்குவதற்கும், நீண்டகாலக் கல்வி மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் வேண்டும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் ''இலங்கை நீர்ப்பரப்பில்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''இலங்கை நீர்ப்பரப்புகளில் அல்லது ஆழ்கடலில்'' என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற் றிருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 16அ மற்றும் 16ஆ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

**7**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன், இவை முறையே அச்சட்டவாக்கத்தின் 16அ மற்றும் 16ஆ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும் :-

''மீன்பிடி வள்ளங்களின் பதிவையும் மீன்பிடித் தொழிற்பாடுகளுக்கான உரிமத்தையும் இல்லா தாக்குதல் அல்லது இடை நிறுத்துதல்.

16அ. பணிப்பாளர் தலைமையதிபதி, எவரேனுமாள் வேறோர் அரசின் நியாயாதிக்கத்தினுள்ளான நீர்ப்பரப்புகளில் சட்டமுறையற்ற மீன்பிடித் தொழிற்பாடுகளை நிறைவேற்றுவதில் ஈடுபடுகின்றாரென்றும், அத்தகைய தொழிற்பாடுகளுக்காகப் பயன்படுத்தப்பட்ட மீன்பிடி வள்ளம் 15 ஆம் பிரிவின்கீழ் பதிவுசெய்யப்பட்ட ஓர் உள்ளூர் மீன்பிடி வள்ளமாக உள்ளதென்றும் நம்புவதற்கு அவருக்கு நியாயமான ஏதுக்கள் உள்ளவிடத்து, விசாரிக்கப்படுவதற்கான சந்தர்ப்பம் ஒன்றை, விடயத்துக்கேற்ப, அத்தகைய ஆளுக்கு அல்லது சொந்தக்காரருக்கு அளித்தபின்னர், அவர் –

(அ) 15 ஆம் பிரிவின்கீழ் உள்ளூர் மீன்பிடி வள்ளமொன்றாக அத்தகைய வள்ளத்தின் பதிவை இல்லாதாக்கலாம் அல்லது அவரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு இடைநிறுத்தலாம் ; அத்துடன்

(ஆ) விடயத்துக்கேற்ப, இலங்கை நீர்ப்பரப்புகளில் அல்லது ஆழ்கடலில் விதித்துரைக்கப்பட்ட எவையேனும் மீன்பிடித் தொழிற்பாடுகளில் ஈடுபடுவதற்கு உரிமம்

பெற்றவருக்கு அதிகாரமளித்து, விடயத்துக் கேற்ப, 6 ஆம் பிரிவின்கீழ் அல்லது 14அ என்னும் பிரிவின் கீழ் அந்த மீன்பிடி வள்ளம் தொடர்பில் வழங்கப்பட்ட ஏதேனும் உரிமத்தை இல்லாதாக்கலாம் அல்லது இடைநிறுத்தலாம்.

*சொந்தக்காரரினாலான தகவலின் மீதான இல்லா தாக்குகை.*

16ஆ. பதிவுசெய்யப்பட்ட மீன்பிடி வள்ளமொன்றின் சொந்தக்காரர், குறித்துரைக்கப்பட்டவொரு தேதிக்குப் பின்னர் இலங்கை நீர்ப்பரப்புகளில் அல்லது ஆழ்கடலில் மீன்பிடிக்கும் நோக்கத்துக்காகத் தனது பெயரில் பதிவுசெய்யப்பட்ட மீன்பிடி வள்ளத்தைத் தாம் பயன்படுத்துவதற்கு உட்கருதவில்லையாதலால் அத்தகைய மீன்பிடி வள்ளத்தின் பதிவை இல்லாதாக்கும்படி எழுத்தில் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு வேண்டுகோள் விடுக்குமிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதி, அத்தகைய மீன்பிடி வள்ளம் இலங்கை நீர்ப்பரப்புகளில் அல்லது ஆழ்கடலில் மீன்பிடிக்கும் நோக்கத்துக்காகப் பயன்படுத்தப்படமாட்டாதென்ற நிகழ்வுபற்றித் தம்மைத் திருப்திப்படுத்திய பின்னர் அத்தகைய மீன்பிடி வள்ளத்தின் பதிவை இல்லாதாக்குதல் வேண்டும். அத்தகைய இல்லாதாக்குகை, அவரினாற் குறித்துரைக்கப்படுகின்றவாறான தேதியிலிருந்து பயனுறுதல் வேண்டும் இல்லாதாக்குகை பற்றிய நிகழ்வை அவர் எழுத்தில் சொந்தக்காரருக்கு அறிவித்தலும் வேண்டும்.''.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**8.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவு, ''இலங்கை நீர்ப்பரப்புக்களில்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''இலங்கை நீர்ப்பரப்புகளில் அல்லது ஆழ்கடலில்'' என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

**9**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :-

*“கடற்றொழில் முகாமை இடப்பரப்புகள்.*

31. (1) ஏதேனும் இடப்பரப்பிலுள்ள மீனவர், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கடற்றொழில் முகாமை இடப்பரப்பொன்றாக, இலங்கை நீர்ப் பரப்புகளினதும் அல்லது அத்தகைய நீர்ப்பரப்புகள் மற்றும் அதற்கருகாமையிலுள்ள காணி ஆகிய இரண்டினதும் குறித்துரைக்கப்பட்ட இடப்பரப்பொன்றைப் பெயர்குறிக்கும்படி பணிப்பாளர் தலைமையதிபதிக்கு எழுத்தில் வேண்டுகோள் விடுக்கலாம்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி -

(அ) அவரது சொந்தப் பிரேரணையின் பேரில், அல்லது

(ஆ) (1) ஆம் உட்பிரிவின்கீழ் அவருக்கு எழுத்தில் செய்யப்படும் வேண்டுகோளின்மீது,

இலங்கை நீர்ப்பரப்புகளினதும் அல்லது அத்தகைய நீர்ப்பரப்புகள் மற்றும் அதற்கருகாமையிலுள்ள காணி ஆகிய இரண்டினதும் குறித்துரைக்கப்பட்டவோர் இடப்பரப்பு, கடற்றொழில் முகாமை இடப்பரப்பொன்றாகப் பெயர்குறிக்கப்படுதல் வேண்டுமென அமைச்சருக்கு விதந்துரைக்கலாம் :

ஆயின், பணிப்பாளர் தலைமையதிபதி, ஏதேனும் இடப்பரப்பில் மீனின் மற்றும் வேறு நீர்வாழ் உயிரின வளங்களின் நிலைபெறுதகுதன்மைக்கு அச்சுறுத்துதல்கள் இருக்கின்ற சூழ்நிலைகளில்

நியாயமானவாறான அத்தகைய விசாரணைகளுக்கும் நுண்ணாய்வுகளுக்கும் பின்னர் தம்மைத் திருப்திப்படுத்திய பின்னர் மட்டுமே அத்தகையவொரு விதப்புரையைச் செய்தல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழான விதப்புரையைப் பெற்றதன்மேல், அமைச்சர், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கடற்றொழில் முகாமை இடப்பரப்பொன்றாக விதப்புரையிற் குறிப்பீடு செய்யப்பட்ட இடப்பரப்பைப் பெயர்குறிக்கலாம்.''.

*முதன்மைச் சட்டவாக்கத்தில் பிரிவு 31அ மற்றும் பிரிவு 31ஆ என்பவற்றை உட்புகுத்துதல்.*

**10**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவை, உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றனவென்பதுடன், இவை அச்சட்டவாக்கத்தின் 31அ மற்றும் 31ஆ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும் :-

*''கடற்றொழில் முகாமை ஒருங்கிணைப்புக் குழு.*

31அ. (1) பணிப்பாளர் தலைமையதிபதியினால் நியமிக்கப்பட்டதும், 31 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றினால் பெயர்குறிக்கப்பட்ட ஒவ்வொரு முகாமை இடப்பரப்புக்கானதும், (இதனகத்துப்பின்னர் ''ஒருங்கிணைப்புக் குழு'' எனக் குறிப்பீடுசெய்யப்படுவதுமான) கடற்றொழில் முகாமை ஒருங்கிணைப்புக் குழுவொன்றிருத்தல் வேண் டும்.

(2) ஒருங்கிணைப்புக் குழு அத்தகைய ஒருங்கிணைப்புக் குழுவினால் தீர்மானிக்கப்பட வேண்டிய கருமத்தைக் கவனத்துட்கொண்டு, பின்வருவோரிலிருந்தும் அவர்களுக்கிடையேயிருந்தும் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அமைக்கப்படுதல் வேண்டும் :

(அ) மாவட்டக் கடற்றொழில் அலுவலகத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலரும் அவ்வலுவலகத்தைச் சேர்ந்த இரு வேறு அலுவலர்களும் ;

(ஆ) (i) அக்கடற்றொழில் முகாமை இடப்பரப்புக்காக அமைக்கப்பட்ட கடற்றொழிற் குழுவின் உறுப்பினர்களிடையேயிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட நான்கு ஆட் களுக்கு மேற்படாதோர் ; அல்லது

(ii) அக்கடற்றொழில் முகாமை இடப்பரப்பில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கடற்றொழிற் குழுக்கள் இருக்குமிடத்து, அக்கடற்றொழில் முகாமை இடப்பரப்பிலுள்ள எல்லாக் கடற்றொழிற் குழுக்களினதும் உறுப்பினர்களினால் தேர்ந்தெடுக்கப்பட்ட பன்னிரெண்டு ஆட்களுக்கு மேற்படாதோர் ;

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய ஒவ்வொரு கடற்றொழிற் குழுவிலிருந்தும் சம எண்ணிக்கையினரான உறுப்பினர்கள் இருத்தல் வேண்டும் ;

(iii) ஏலவேயுள்ள கடற்றொழில் முகாமை அதிகாரசபைகளின் எல்லா உறுப்பினர்களும் ;

(இ) கடற்றொழில் முகாமை இடப்பரப்பு எந்த நிருவாக மாவட்டத்தினுள் அமைந்துள்ளதோ அந்த நிருவாக மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் ;

(ஈ) கடற்றொழில் முகாமை இடப்பரப்பு எந்த நிருவாக மாவட்டத்தினுள் அமைந்துள்ளதோ அந்த நிருவாக மாவட்டத்தின் பிரதேச செயலாளர் ;

(உ) கடற்றொழில் முகாமை இடப்பரப்பு எந்தப் பிரதேச சபை இடப்பரப்பினுள் அமைந்துள்ளதோ அந்தப் பிரதேச சபை இடப்பரப்புக்காக அமைத்துருவாக்கப்பட்ட பிரதேச சபையின் தவிசாளர்;

(ஊ) கடற்றொழில் முகாமை இடப்பரப்பு எந்த மாநகரசபைப் பிரதேச எல்லைகளினுள் அமைந்துள்ளதோ அந்த மாநகரசபைப் பிரதேசத்துக் காக அமைத்துருவாக்கப்பட்ட மாநகர சபையின் முதல்வர் அல்லது கடற்றொழில் முகாமை இடப்பரப்பு எந்த நகரசபை இடப்பரப்பின் எல்லைகளினுள் அமைந்துள்ளதோ அந்த நகரசபை இடப் பரப்புக்கான நகரசபையின் தவிசாளர்;

(எ) 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட நகர அபிவிருத்தி அதிகார சபையைச் சேர்ந்தவரும், அவ்வதிகார சபை யின் தவிசாளரினால் பெயர்குறித்து நியமிக் கப்பட்டவருமான அலுவலரொருவர் ;

(ஏ) கடற்றொழில் முகாமை இடப்பரப்பு எந்த மாகாணத் தினுள் அமைந்துள்ளதோ அந்த மாகாணத்தின் மாகாண கடற்றொழிற் பணிப்பாளர் ;

(ஐ) 1981 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க, கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைச் சட்டத்தின்கீழ் தாபிக் கப்பட்ட கரையோரம் பேணல் திணைக்

களத்தைச் சேர்ந்தவரும், கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத்தின் பணிப்பாளர் தலைமையதிபதியினால் பெயர்குறித்து நியமிக்கப் பட்டவருமான அலுவலரொருவர் ;

(ஒ) *1981 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க, தேசிய நீர்வாழ் உயிரின வளங்கள் மற்றும் அபிவிருத்தி முகவர் நிலையச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட தேசிய நீர்வாழ் உயிரின வளங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவர் நிலையத்தைச் சேர்ந்தவரும், அம்முகவர் நிலையத்தினை ஆளும் சபையின் தவிசாளரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவருமான அலுவலரொருவர் ;*

(ஓ) *1998 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, இலங்கைத் தேசிய நீரியல் பொருட்களைப் பண்படுத்தல் அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைத் தேசிய நீரியல் பொருட்களைப் பண்படுத்தல் அபிவிருத்தி அதிகார சபையைச் சேர்ந்தவரும், அவ்வதிகாரசபையின் பணிப்பாளர் சபைத் தவிசாளரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவருமான அலுவலரொருவர் ;*

(ஔ) *1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட மத்திய சூழல் அதிகாரசபையைச் சேர்ந்தவரும், அவ்வதிகாரசபையின் தவிசாளரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவருமான அலுவலரொருவர் ;*

(க) *(469 ஆம் அத்தியாயமான) தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட வனசீவராசிகள் பாது*

காப்புத் திணைக்களத்தைச் சேர்ந்தவரும், வனசீவராசிகள் பாதுகாப்புப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவருமான அலுவலரொருவர் ;

(ங) (451 ஆம் அத்தியாயமான) காடு பேணல் கட்டளைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட காடு பேணல் திணைக்களத்தைச் சேர்ந்தவரும், காடு பேணுநர் தலைமையதிபதியினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவருமான அலுவலரொருவர் ;

(ச) 2008 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, கடல் தீழ்ப்பு தடுப்புச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட கடல் சூழற் பாதுகாப்பு அதிகாரசபையைச் சேர்ந்தவரும், அவ்வதிகாரசபையின் தவிசாளரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவருமான அலுவலரொருவர் ;

(ஞ) காணிகள் என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவரும், காணிகள் அமைச்சைச் சேர்ந்தவருமான அலுவலரொருவர் ;

(ட) 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கைச் சுற்றுலாப் பயணத்துறை அபிவிருத்தி அதிகாரசபையைச் சேர்ந்தவரும், அவ்வதிகாரசபையின் தவிசாளரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவருமான அலுவலரொருவர் ;

(ண) கடற்றொழில் முகாமை இடப்பரப்பு எந்த மாகாணத்தினுள் அமைந்துள்ளதோ அந்த மாகாணத்துக்கான பிரதிப் பொலிசுப்

*பரிசோதகர் தலைமையதிபதியினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவரும், பொலிசுத் திணைக்களத்தைச் சேர்ந்தவருமான அலுவலரொருவர் ;*

*(து) 2009 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, கரையோரப் பாதுகாப்புச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தைச் சேர்ந்தவரும், அத் திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதியினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவருமான அலுவலரொருவர் ; அத்துடன்*

*(ந) அக்கடற்றொழில் முகாமை இடப்பரப்பு எந்த மாகாணத்தினுள் அமைந்துள்ளதோ அந்த மாகாணத்துக்கான கடற்படை ஏவுநரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட இலங்கைக் கடற்படையின் அலுவலரொருவர்.*

(3) பணிப்பாளர் தலைமையதிபதி (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட அலுவலர்களுக்கிடையிலிருந்து ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டுநரொருவரை நியமித்தல் வேண்டும். செயலாளர் அல்லது கூட்டுநர். கடற்றொழில் முகாமை இடப்பரப்பொன்றுக்காக அமைத்துருவாக்கப்பட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் எல்லாக் கூட்டங்களையும் கூட்டுதல் வேண்டும்.

(4) ஒரு கடற்றொழில் முகாமை இடப்பரப்புக்காக அமைத்துருவாக்கப்பட்ட ஒருங்கிணைப்புக் குழு, ஒவ்வொரு மாதமும் ஆகக்குறைந்தது ஒருதடவையேனும் அல்லது அவசரகால நிலைமையொன்றில், கூடுதல் வேண்டும்.

(5) பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது அவரது நியமத்தர், ஒருங்கிணைப்புக் குழுவொன்றின் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமைதாங்குதல் வேண்டும். ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டத்துக்குப் பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது அவரது நியமத்தர் வருகைதராதிருப்பின், சமுகமாயிருக்கும் உறுப்பினர்கள் தம்முள்ளிருந்து அக்கூட்டத்துக்கான தவிசாளரொருவரைத் தேர்ந்தெடுக்கலாம்.

(6) பணிப்பாளர் தலைமையதிபதி, ஒருங்கிணைப்புக் குழுவின் உறுப்பினர்களாகவிருப்பதற்கென பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்களின் பிரதிநிதிகள், கடற்றொழில் முகாமை இடப்பரப்பின் எல்லைகளினுள் நடாத்தப்பட்ட வேறு வர்த்தகச் செயற்பாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கழகங்களின் பிரதிநிதிகள், கடற்றொழில் முகாமை இடப்பரப்பின் எல்லைகளினுள் மீனவப் பெண்கள் குழுவினரின் பிரதிநிதிகள், இயற்கை வளங்களின் முகாமையுடனும் மீனவரின் சேமநலத்துடனும் சம்பந்தப்பட்டுள்ள அரசாங்கம்சாரா ஒழுங்கமைப்புகளின் பிரதிநிதிகள் என்போருட்பட, வேறு ஆட்களை நியமிக்கலாம்.

கடற்றொழில் அபிவிருத்தி மற்றும் முகாமைத் திட்டங்கள்.

31ஆ. (1) கடற்றொழில் முகாமை இடப்பரப்புத் தொடர்பில் கடற்றொழில் அபிவிருத்தி மற்றும் முகாமைத் திட்டமொன்றை, அத்தகைய இடப்பரப்பை கடற்றொழில் முகாமை இடப்பரப்பொன்றாகப் பெயர்குறிக்கின்ற 31(3) ஆம் பிரிவின்கீழான கட்டளைத் தேதியிலிருந்து ஓராண்டு காலப்பகுதியினுள் பணிப்பாளர் தலைமையதிபதியிடம் சமர்ப்பித்தல், ஒரு கடற்றொழில் முகாமை இடப்பரப்புக்காக அமைத்துருவாக்கப்பட்ட ஒருங்கிணைப்புக் குழுவொன்றின் கடமையாதல் வேண்டும்.

(2) ஓர் ஒருங்கிணைப்புக் குழுவினால் தயாரிக்கப்பட்ட கடற்றொழில் அபிவிருத்தி மற்றும்

முகாமைத்திட்டம், பின்வரும் முன்மொழிவுகளுள் எவற்றையும் அல்லது எல்லாவற்றையும் உள்ள டக்குதல் வேண்டும் :-

(அ) குறிப்பிட்ட பயன்பாடுகளுக்காகக் கடற்றொழில் முகாமை இடப்பரப்பை வலயங்களாகப் பிரிப்பதற்கான முன்மொழிவுகள்;

(ஆ) கடற்றொழில் முகாமை இடப்பரப்பில் மீனையும் நீர்வாழ் உயிரின வளங்களையும் பிடிப்பதற்காகக் குறிப்பிட்ட வகையின வான மீன்பிடி கருவிகள் அல்லது சாதனங்கள் பயன்படுத்தப்படுவதனைத் தடைசெய்வதற்கான அல்லது அவற்றை ஒழுங்குபடுத்துவதற்கான முன்மொழிவுகள் ;

(இ) கடற்றொழில் முகாமை இடப்பரபில் மீனையும் அல்லது நீர்வாழ் உயிரின வளங்களையும் பிடிப்பதற்காகக் குறிப்பிட்ட முறைகள் பயன்படுத்தப்படுவதனைத் தடைசெய்வதற்கான அல்லது அவற்றை ஒழுங்குபடுத்துவதற்கான முன்மொழிவுகள் ;

(ஈ) கடற்றொழில் முகாமை இடப்பரப்பில் குறிப்பிட்ட மீன் இனங்களை அல்லது நீர்வாழ் உயிரின வளங்களைப் பிடிப்பதனைத் தடைசெய்வதற்கான முன்மொழிவுகள் ;

(உ) அக்கடற்றொழில் முகாமை இடப்பரப்பின் குறிப்பிட்ட பாகங்களில் மீன்பிடிப்பதற்காக அல்லது அம்முகாமை இடப்பரப்பில் குறிப்பிட்ட மீன் இனங்களைப் பிடிப்பதற்காக மூடப்பட்ட பருவகாலங்களை வெளிப்படுத்துவதற்கான முன்மொழிவுகள் ;

(ஊ) கடற்றொழில் முகாமை இடப்பரப்பில் எந்நேரங்களில் மீன் அல்லது நீர்வாழ் உயிரின வளங்கள் பிடிக்கப்படலாமோ அந்நேரங்களை ஒழுங்குபடுத்துவதற்கான முன்மொழிவுகள் ;

(எ) கடற்றொழில் முகாமை இடப்பரப்பில் இயற்கைக் காட்சியழகைக் கொண்ட அல்லது கலாசார அல்லது சூழலியற்சார் முக்கியத்துவம் வாய்ந்த அமைவிடங்களைப் பேணிக்காப்பதற்கான முன்மொழிவுகள் ;

(ஏ) கடற்றொழில் முகாமை இடப்பரப்பில் மீனினதும் மற்றும் வேறு நீர்வாழுயிரின வளங்களினதும் நிலைபெறுதகு தன்மையைச் சீராக்குவதற்கான முன்மொழிவுகள் ;

(ஐ) கடற்றொழில் முகாமை இடப்பரப்புடன் தொடர்புபட்ட ஆராய்ச்சி, சேகரிப்புக்குப் பின்னரான நிலை மற்றும் சந்தைப்படுத்தல் அத்துடன் அபிவிருத்தி அம்சங்கள் என்பவற்றை எதிர்நோக்குவதற்கான முன்மொழிவுகள் ;

(ஒ) கண்காணித்தல், இணங்கியொழுகுதல் மற்றும் மேற்பார்வை செய்தல் என்பவற்றுக்கான முன்மொழிவுகள் ; அத்துடன்

(ஓ) கலந்தாலோசனைக்கும் பரிசீலனைக்குமான முன்மொழிவுகள்.

(3) பணிப்பாளர் தலைமையதிபதி, இச்சட்டத்தின் நோக்கங்களைக் கருத்திற்கொண்டு, ஓர் ஒருங்கிணைப்புக் குழுவினால் அவருக்குக் கடற்றொழில் அபிவிருத்தி மற்றும் முகாமைத் திட்டமொன்று கமர்ப்பிக்கப்பட்டதிலிருந்து அறுபது

நாட்களினுள், அத்திட்டத்துக்கான திரிபுபடுத்துதல்கள் எவையேனுமிருப்பின் அவற்றைச் செய்து, அமைச்சரிடம் அவரது அங்கீகாரத்துக்காக அத்திட்டத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(4) அமைச்சர் (3) ஆம் உட்பிரிவின்கீழ் சமர்ப்பிக்கப்பட்ட திட்டமொன்றை, அது அவரிடம் சமர்ப்பிக்கப்பட்டதிலிருந்து அறுபது நாட்களினுள் அங்கீகரித்தல் வேண்டுமென்பதுடன், அத்திட்டத்தை வர்த்தமானியில் வெளியிடுவித்தலும் வேண்டும். அத்திட்டமானது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து அல்லது அதன்கண் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(5) அமைச்சர் 61 ஆம் பிரிவின்கீழ் தோதான ஒழுங்குவிதிகளை ஆக்குவதன்மூலமும் 34 ஆம் பிரிவின்கீழ் தோதான அறிவித்தல்களை வெளியிடுவதன்மூலமும் திட்டத்தின் ஏற்பாடுகளுக்குப் பயன்கொடுத்தல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**11.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியை நீக்கிவிடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 49 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**12.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 49 ஆம் பிரிவு இத்தாற்பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1) ஆம், (2) ஆம் உட்பிரிவுகளை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன்மூலமும் :-

"(1) இச்சட்டத்தின் 14உ, 15, 16, 17 அல்லது 22 என்னும் பிரிவுகளின் ஏற்பாடுகளை அல்லது 30 ஆம்

பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையை மீறுகின்ற அல்லது அவற்றுக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற எவரேனுமாள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்க விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் 6, 28, 34 அல்லது 35 என்னும் பிரிவுகளின் ஏற்பாடுகளை மீறுகின்ற அல்லது அவற்றுக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற எவரேனுமாள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கவிளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.''.

(2) இரண்டாம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவுகளை உட்புகுத்துவதன்மூலமும் :-

''(2அ) பிரிவுகள் 14அ அல்லது 14ஊ என்பவற்றின் ஏற்பாடுகளை மீறுகின்ற அல்லது அவற்றுக்கிணங்கியொழுகத் தவறுகின்ற எவரேனுமாள் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கவிளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், இரண்டாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

(2ஆ) இச்சட்டத்தின் 29 ஆம் பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற அல்லது அவற்றுக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற எவரேனுமாள் தவறொனறுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்ன

ரான சுருக்க விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக் கப்படுவதன்மேல், ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.".

(3) அப்பிரிவின் (4) உட்பிரிவில், "ஆயிரம் ரூபாவிற்குக் குறையாத குற்றப்பணமொன்றிற்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக "இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற் களை இடுவதன்மூலமும் ;

(4) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும் :-

"(5) பிரிவு 61(ந) என்பதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதியொன்று தவிர இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதியொன்றை மீறுகின்ற எவரேனுமாள் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்ன ரான சுருக்கவிளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப் படுவதன்மேல், இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும் :

ஆயின்,-

(அ) பை போன்ற வலையில் மீன்பிடித்தலை ;

(ஆ) வெளிப்புற முட்டைகளைக் கொண்டுள்ள முள்ளிறாலை அல்லது வெளிப்புற முட்டை களுடனான நழுவுறாலைக் கொள்வனவு செய்தலை, விற்பனை செய்தலை, இடம் பெயர்த்தலை அல்லது உடைமையில் வைத் திருத்தலை ; அல்லது

(இ) முள்ளிறாலின் அல்லது நழுவுறாலின் முட்டைகளை அகற்றுதலை,

தடைசெய்கின்ற ஓர் ஒழுங்குவிதியின் மீறுகையை உட்படுத்துகின்ற தவறொன்றுக்கான குற்றத்தீர்ப்பின் விடயத்தில், குற்றபண மானது ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பண மாதல் வேண்டும்.".

(5) ஒராம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன்மூலமும் :-

"(6) இச்சட்டத்தின் 61(ந) என்னும் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியை மீறுகின்ற எவரேனுமாள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கவிளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், இரண்டாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றபணமொன்றுக்கு ஆளாகுதலும் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 61 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**13.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 61 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வுட்பிரிவின் (ஒ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன்மூலமும் :-

"(ஒஒ) பிரிவு 31பீ(4) என்பதன்கீழ் அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டதும், வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமானவோர் அபிவிருத்தி மற்றும் முகாமைத் திட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்துதல்.".

(2) அவ்வுட்பிரிவின் (த) ஆம் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளை உட்புகுத்துவதன்மூலமும் :-

"(தஅ) பயிற்சிக்காக உள்ளூர் மீன்பிடி வள்ளங்களின் மாலுமிகளைத் தெரிவுசெய்வதில் கடைப்பிடிக்கப்படவேண்டிய கட்டளைக்கற்கள் ;

(தஆ) உள்ளூர் மீன்பிடி வள்ளங்களின் மாலுமிக ளுக்குத் தகுதிச்சான்றிதழ்களை வழங்குவதற் கான திட்டமொன்றையும் உள்ளூர் மீன்பிடி வள்ளங்களின் மாலுமிகளின் பயிற்சிக்காகப் பின்பற்றப்படவேண்டிய பாடத்திட்டத்தையும் வகுத்தமைத்தல் ;

(தஇ) மீன் வளர்த்தல் சூழல்முறைமைகளைப் பாதுகாத்தல் ;

(தஈ) கைத்தொழில் மற்றும் வீட்டுக் கழிவுப் பொருளை இலங்கை நீர்ப்பரப்புகளில் அகற்று தலைத் தடுத்தலும், இலங்கை நீர்ப்பரப்பு களிலுள்ள மீன் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்களுக்குத் தீங்குவிளைவிக்கும் ஒருமுறை யில் அத்தகைய நீர்ப்பரப்புகளை நிரப்புதலைத் தடுத்தலும் ;

(தஉ) பொழுதுபோக்குக்காக மீன்பிடிப்பதற்குப் பயன்படுத்தப்படும் வள்ளங்களைப் பதிவு செய்தலும் பொழுதுபோக்குக்காக மீன்பிடிப் பதற்கான உரிமங்களை வழங்குதலும் ;

(தஊ) மீன்பிடித் தொழிற்பாடுகளுக்காகப் பயன் படுத்தப்படும் மீன்பிடிகருவிகளையும், சாத னங்களையும், என்ஜின்களையும் இறக்குமதி செய்தல், உற்பத்தி செய்தல் மற்றும் விற்பனை செய்தல் என்பனவற்றைத் தடைசெய்தலும் ஒழுங்குபடுத்துதலும் ;

(தஎ) உள்ளூர் மீன்பிடி வள்ளங்களில் நிறுவப்பட்டு பேணப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட வையும், கண்காணிப்புக்கும் மேற்பார்வைக்கு மான தொழினுட்பக் கருவிகள் ;

(தஏ) உள்ளக என்ஜின்கள் பொருத்தப்பட்ட உள்ளூர் மீன்பிடி வள்ளங்களில் இணைக்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட அலைவாங்கிகள் ;

(தஐ) மாவட்ட மற்றும் கிராமிய மட்டங்களில் தேசியக் கடற்றொழில் சம்மேளனம் மற்றும் கடற்றொழில் ஒழுங்கமைப்புகளைத் தாபித்தல் ; அத்துடன்

(ந) (i) 1982, திசெம்பர் 10 ஆந் தேதிய கடற்சட்டத்தின் மீதான ஐக்கிய நாடுகள் சபைச் சமவாயத்தின்கீழ் ;

(ii) இந்து சமுத்திர டியூனா ஆணைக்குழுவினால் ;

(iii) 1995 ஆம் ஆண்டின் மீன் கையிருப்புகள் உடன்படிக்கையின்கீழ் ;

(iv) 2009 ஆம் ஆண்டின் சட்டவிரோதமான, அறிக்கையிடப்படாத மற்றும் ஒழுங்குபடுத்தப்படாத மீன்பிடித்தலைத் தடுப்பதற்கும், தடைசெய்வதற்கும், ஒழிப்பதற்குமான துறைமுக அரச வழிமுறைகள்மீதான ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் கமத்தொழில் ஒழுங்கமைப்பு (உகஒ) உடன்படிக்கையின்கீழும்

ஏற்றுக்கொள்ளப்பட்ட பேணிக்காத்தல் மற்றும் முகாமை வழிமுறைகளைச் செயற்படுத்துதல்.”.

**14**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 66 ஆம் பிரிவு, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :- முதன்மைச் சட்டவாக்கத்தின் 66 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) “நீரியற் பொருட்களை பண்படுத்தல்” என்பதன் வரைவிலக்கணத்துக்கு நேர்முன்னர் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலமும் :-

“2009 ஆம் ஆண்டின் சட்டவிரோதமான, அறிக்கையிடப்படாத மற்றும் ஒழுங்குபடுத்தப்படாத மீன்பிடித்தலைத் தடுப்பதற்கும், தடைசெய்வதற்கும், ஒழிப்பதற்குமான துறைமுக அரச வழிமுறைகள் மீதான உடன்படிக்கை” என்பது, பயனுள்ள துறைமுக அரச வழிமுறைகளைச் செயற்படுத்துவதன்மூலம் சட்டவிரோதமான, அறிக்கையிடப்படாத மற்றும் ஒழுங்குபடுத்தப்படாத (சஅஒ) மீன்பிடித்தலைத் தடுப்பதற்கும், தடைசெய்வதற்கும், ஒழிப்பதற்கும், அதன்மூலம் உயிருள்ள கடல்சார் வளங்களினதும் கடல்சார் சூழல் முறைமைகளினதும் நீண்டகாலப் பேணிக்காப்பையும் நிலைபெறுதகு பயன்பாட்டையும் உறுதிப்படுத்துவதற்கும், 2009, நவெம்பர் 22 ஆந் தேதியன்று ரோமாபுரியில் கையொப்பமிடப்பட்ட உடன்படிக்கை எனப் பொருள்படும்”;

(2) “அதிகாரம்பெற்ற அலுவலர்” என்பதன் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலமும் :-

‘ “பேணிக்காத்தல் மற்றும் முகாமைத்துவ வழிமுறைகள்” என்பது, உயிருள்ள கடல்சார் வளங்களின் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட இனங்களைப் பேணிக்காப்பதற்கு அல்லது முகாமைசெய்வதற்கு எடுக்கப்பட்ட வழிமுறைகள் எனப் பொருள்படும்’;

(3) “மீன்பிடித் தொழிற்பாடு” என்பதன் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலமும் :-

' "*1995* ஆம் ஆண்டின் மீன் கையிருப்புகள் உடன்படிக்கை" என்பது, *1995*, திசெம்பர் *4* ஆந் தேதியன்று நியூயோர்க்கில் கையொப்பமிடப்பட்டதும், நிர்ணயிக்கப்பட்ட விலையிலான மீன் கையிருப்புகள் மற்றும் பெருமளவில் இடம்பெயரும் மீன் கையிருப்புகள் என்பவற்றின் பேணிக்காப்பும் முகாமையும் தொடர்பாக, *1982*, திசெம்பர் *10* ஆந் தேதிய கடற்சட்டத்தின் மீதான ஐக்கிய நாடுகள் சபைச் சமவாயத்தின் செயற்படுத்துகைக்கான உடன்படிக்கை எனப் பொருள்படும்;';

(4) "வெளிநாட்டு மீன்பிடி வள்ளம்" என்பதன் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலமும் :-

' "ஆழ்கடல்" என்பது, இலங்கை நீர்ப்பரப்புகளுக்கு அப்பாலுள்ள அல்லது வேறேதேனும் அரசின் தேசிய நியாயாதிக்கத்தினுள்ளான நீர்ப்பரப்புகளுக்கப்பாலுள்ள நீர்ப்பரப்புகள் எனப் பொருள்படும்;';

(5) "இறக்குமதி" என்பதன் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலமும் :-

' "இந்து சமுத்திர டியூனா ஆணைக்குழு" என்பது, *1993*, நவெம்பர் *25* ஆந் தேதியன்று ரோமாபுரியில் உ.க ஒழுங்கமைப்புப் பேரவையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட, இந்து சமுத்திர டியூனா ஆணைக்குழுவைத் தாபிப்பதற்கான உடன்படிக்கைமூலம் தாபிக்கப்பட்ட இந்து சமுத்திர டியூனா ஆணைக்குழு எனப் பொருள்படும்;'; அத்துடன்

(6) ''இலங்கை பெருநீர்ப்பரப்பு'' என்பதன் வரைவிலக் கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக் கணத்தை உட்புகுத்துவதன்மூலமும் :-

' ''1982, திசெம்பர் 10 ஆந் தேதிய கடற்சட்டத்தின் மீதான ஐக்கிய நாடுகள் சபைச் சமவாயம்'' என்பது, 1982, திசெம்பர் 10 ஆந் தேதியன்று ஜமேக்கா, மொன்டேகோ பேயில் கையொப்பமிடப்பட்ட கடற் சட்டத்தின் மீதான சமவாயம் எனப் பொருள்படும்.'.

''மீனவர்'' என்னும் சொல்லைப் பதிலிடுதல்.

**15**. ''மீன்பிடிப்போர்'' என்னும் சொல், முதன்மைச் சட்டவாக் கத்தின் ஏதேனும் ஏற்பாட்டில் அச்சொல் காணப்படும் இடங்களி லெல்லாம் ''மீனவர்'' என்னும் சொல் பதிலிடப்படுதல் வேண் டும்.

நிலைபெயர் கால ஏற்பாடுகள்.

**16**. இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னர் முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவின்கீழ் பெயர்குறிக்கப்பட்ட ஒவ்வொரு கடற்றொழில் முகாமை இடப்பரப்பும், இச்சட்டத்தின் 9 ஆம் பிரிவினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்ட வாக்கத்தின் 31 ஆம் பிரிவின்கீழ் பெயர்குறிக்கப்பட்ட கடற் றொழில் முகாமை இடப்பரப்பொன்றாகக் கருதப்படுதல் வேண்டு மென்பதுடன், அதற்கிணங்க, இச்சட்டம் தொடங்கும் தேதி யிலிருந்து மூன்று மாதங்களினுள் அக்கடற்றொழில் முகாமை இடப்பரப்புக்காக கடற்றொழில் முகாமை ஒருங்கிணைப்புக் குழுவொன்று அமைத்துருவாக்கப்படுதலும் வேண்டும். முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் கடற்றொழில் முகாமை அதிகாரசபையானது இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்து உளதாகவிராதொழிதல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**17**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்